O.S.02-2023

## முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை

அ.வ.எண். 02/2023

வாதி தரப்பு 1வது ஞானவேல் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ஞானவேல் | வயது | : | 59/2025 |
| தகப்பனார் பெயர் | : | பெருமாள் | தாலுகா | : | சென்னை |
| கிராமம் | : | வலசரவாக்கம் | தொழில் | : | கண் கண்ணாடிகள் வியாபாரம் |

நாள்-21.11.2025

வா.சா.1

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் சென்னையில் வசித்து, கண் கண்ணாடிகள் வியாபாரம் செய்து வருகிறேன்.

2) எனக்கு பிரதிவாதியை நான்கு வருடங்களாக தெரியும். வா.சா.ஆ.1 கிரைய ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்று ஞாபகத்தில் இல்லை. அந்த பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் அது பிரதிவாதிக்குத்தான் தெரியும்.

3) எனது நண்பர் வெங்கட்ரமணன் என்பவர் தீயணைப்பு துறையில் வேலை பார்த்தார் என்றால் அவரது மனைவி மூலமாக வெங்கட்ரமணனை எனக்கு தெரியும்.

4) பிரதிவாதிக்கும், வெங்கட்ரமணனுக்கும் இடையே கொடுக்கல் வாங்கல்இருந்தது என்றாலும், பிரதிவாதி வெங்கட்ரமணனிடம் ரூ.4,00,000/- கடன் வாங்கியிருந்தார் என்றாலும், அதற்கு அசல் மற்றும் வட்டி சேர்த்து ரூ.12,00,000/- பிரதிவாதி வெங்கட்ரமணனுக்கு கொடுப்பதாக முடிவு செய்யப்பட்டு, மேற்படி ரூ.12,00,000/-த்தில் 2022-ம் வருடம் ஜீன் மாதம் 23ம் தேதி ரூ.4,35,000/- ரொக்கமாகவும், மீதமுள்ள ரூ.65,000/- யை மறுநாள் காலை கொடுத்து கையெழுத்து பெறப்பட்டது என்றாலும், அதற்கான சாட்சியம் தாமரைச்செல்வன் என்றாலும் சரியல்ல.

5) பிரதிவாதியின் கணவரிடமிருந்து, பிரதிவாதி அதிகார பத்திரம் எதுவும் எழுதி வாங்கவில்லை. குடும்ப ஏற்பாட்டு பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்படவில்லை. பிரதிவாதியின் கணவர் வெளிநாட்டில் உள்ளார் என்றால் சரிதான்.

6) எனது பெயரிலும், வெங்கட்ரமணன் பெயரிலும், பிரதிவாதி புதுக்கோட்டை கணேஷ்நகர் காவல் நிலையத்தில் பிரதிவாதி வாங்கிய கடனை கொடுத்த பின்பும், நாங்கள் தொந்தரவு செய்ததாக புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

7) பிரதிவாதி கொடுத்த புகாரினை பெற்று காவல் நிலையத்தில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் பிரதிவாதி மாவட்ட ஆட்சித்தலைவரிடம் புகார் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது.

மு.மா.நீ,

8) வழக்கு மூன்று சொத்துக்களும் பிரதிவாதியின் பெயரில் உள்ளதா என்றால் அவர் பெயரில் உள்ளதாக பிரதிவாதி சொன்னார். அதை நான் பார்க்கவில்லை.

9) மூன்று ஆவணங்களில் ஒரு ஆவணம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றாலும், மற்ற இரண்டு ஆவணங்கள் பிரதிவாதி பெயரில் இல்லை என்றாலும் சரிதான். அது குடும்ப ஏற்பாட்டு சொத்தாகும்.

10) மூன்று சொத்துக்களுக்கும் சந்தை மதிப்பு எவ்வளவு என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11) எனக்கும், பிரதிவாதிக்கும் நேரடியாக தொடர்பு கிடையாது என்றாலும், வெங்கட்ரமணனுக்கும், பிரதிவாதிக்கும் இடையே இருந்த கொடுக்கல் வாங்கல் காரணமாக பிரதிவாதிக்கு எதிராக வெங்கட்ரமணன் அவர் அரசாங்க வேலை பார்த்ததால், அவர் வாதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்யாமல் என் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. ங

12) நான் பிரதிவாதிக்கு பணத்தை நேரடியாக கொடுத்தேன். வங்கி மூலமாக கொடுக்கவில்லை. எனக்கு அந்த தொகை எப்படி கிடைத்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

13) வா.சா.ஆ.1,2 மற்றும் 3 ஆவணங்களும் பிரதிவாதி ரியல் எஸ்டேட் தொழில் செய்துவந்ததால், மேற்படி ஆவணங்களை பிரதிவாதியிடம் ரியல் எஸ்டேட் தொழில் சம்மந்தமாக கேட்டு வாங்கி என் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

14) வெங்கட்ரமணன் நிரப்பப்படாத பிராமிசரி நோட், நிரப்பப்படாத பத்திரத்தை பிரதிவாதியிடமிருந்து வாங்கி கொண்டு அதிகமான தொகை நிரப்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

15) பிரதிவாதி தற்கொலை செய்ய முயற்சி செய்து தூக்க மாத்திரைகள் சாப்பிட்டு மயங்கி விழுந்தவுடன், புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்றால் எனக்கு தெரியாது.

16) பிரதிவாதியின் கணவருக்கு சொந்தமான சொத்தை பிரதிவாதியிடமிருந்து எழுதி வாங்க எங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

17) பேசி முடிக்கப்பட்ட ரூ.12,00,000/-த்திற்கு இரண்டு சாட்சியங்கள் புதுநகர் குமார் மற்றும் அறிவழகன் உள்ளார்கள் என்றாலும், அதற்கு விரோதமாக காழ்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

18) பிரதிவாதி பெண் என்பதால், நாங்கள் தவறாக ஆவணங்களை உற்பத்தி செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

19) பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை மூலமாக சட்டரீதியாக நிவாரணம் பெற முடியாது என்று சொன்னால் சரியல்ல.

20) இந்த வழக்கிற்கும், பிரதிவாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும், நான் எனது நண்பருக்காக பொய்யான வழக்கை தாக்கல் செய்து, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கும், எனது நண்பருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

மு.மா.நீ,

21) நான் சொல்வதுபோல் பிரதிவாதிக்கும், என் நண்பருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.